IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 212 /2012
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Caste | : - |
| Father's Name | : முருகேசன் | Calling | : - |
| Village | : குடியாத்தம் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19 day of September, 2019.

Chief Examination

நான் இந்த வழக்கின் வாதி. என்னை வாதி தரப்பில் 1-வது சாட்சியாக முதல் விசாரணை செய்து எனது நிரூபணவாக்குமூலத்தை கடந்த 5.9.2019 அன்று தாக்கல் செய்தேன். இன்று ஆவணங்களை குறியீடு செய்கிறேன். 09.1.1949 தேதியிட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ1 ஆகும். 31.3.2010 தேதியிட்ட உயிலின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ2 ஆகும். 1.1.1943 முதல் 31.12.1964 வரை பெறப்பட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ 3 ஆகும். 1.1.1965 முதல் 31.12.1986 வரை பெறப்பட்ட அசல் வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ4 ஆகும். 1.1.1987 முதல் 15.4.1999 வரை பெறப்பட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ5 ஆகும். 15.4.1999 முதல் 23.9.2012 வரை பெறப்பட்ட வில்லங்கசான்றிதழின் அசல் வா.சா.ஆ6 ஆகும். முருகேசனின் இறப்பு சான்றிதழின அசல் வா.சா.ஆ7 ஆகும். தமிழ்நாடு விவாசய தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு திட்டத்தின் படி எனக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை வா.சா.ஆ8 ஆகும். எனது திருமண அழைப்பிதழின் அசல் வா.சா.ஆ9 ஆகும். எனக்கு வழங்கபட்ட வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ10 ஆகும். 24.8.2012ம் தேதி நாங்கள் அனுப்பிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ 11 ஆகும். பிரதிவாதிகள் அனுப்பிய பதில்வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ12 ஆகும். புகார் மனு ஏற்புச்சான்றிதழ் வா.சா.ஆ 13 ஆகும். எனது குடும்ப அட்டை அசலுடன் ஒப்பீடு

செய்யப்பட்டது வா.சா.ஆ 14 ஆகும். ( புகார் மனு ஏற்புச்சான்றிதழில் புகார் கொடுத்தவரின் பெயரும், எவர் மீது புகார் கொடுக்கப்பட்டது என்பதற்கான விவரமும் இடம்பெற வில்லை என்பதால் ஆட்சேபணையோடு குறியீடு செய்யப்படுகிறது)

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.